


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 153 | 4 Pages | 1.1.2026 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 153 | 4 பக்கங்கள் | 1.1.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடங்கண்ட பின்னல் லது**

**விளக்கம்:**
முற்றுகை செய்வதற்கு ஏற்ற இடத்தைக் கண்டபின் அல்லாமல் எச் செயலையும் தொடங்கக்கூடாது, பகைவரை இகழவும் கூடாது.

## சபரிமலை சன்னிதானத்தில் புகைப்படம் எடுக்க பத்திரிகையாளர்களுக்கு தடை



சபரிமலை, ஜன.1

சபரிமலை அய்யப்பன் கோவில் நடை கடந்த மாதம் 16ந்தேதி மண்டல பூஜை சீசனுக்காக திறக்கப்பட்டது. இதையடுத்து தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இருமுடி கட்டுகளுடன் சபரிமலைக்கு வந்து சாமி தரிசனம் செய்தனர். கோவிலில் சிகர நிகழ்ச்சியாக கடந்த 27ந்தேதி மண்டல பூஜை நடைபெற்றது. இதையடுத்து அன்று இரவு 10 மணிக்கு நடை சாத்தப்பட்டது.

இந்த நிலையில் மகர விளக்கு பூஜையையொட்டி சபரிமலை அய்யப்பன் கோவில் நடை நேற்று மாலை திறக்கப்பட்டது. தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு முன்னிலையில் மேல்சாந்தி பிரசாத் நம்பூதிரி நடையை திறந்து வைத்து தீபாராதனை நடத்தினார். நடப்பு சீசனையொட்டி வருகிற 14ந்தேதி மகரவிளக்கு பூஜை நடக்கிறது. அன்றைய தினம் மாலை 6.25 மணிக்கு அய்யப்ப சாமிக்கு திருவாபரணம் அணிவித்து சிறப்பு தீபாராதனை நடைபெறும். தொடர்ந்து பொன்னம்பல மேட்டில் தோன்றும் மகர ஜோதியை சன்னிதானத்தில் நின்று பக்தர்கள் தரிசனம் செய்வார்கள்.

இதனிடையே. வழக்கமாக, நடை திறப்பு நாட்களில் சன்னிதானத்தில் புகைப்படம் எடுக்க பத்திரிகையாளர்களுக்கு சிறப்பு அனுமதி அளிக்கப்படும். இந்நிலையில் சபரிமலை தங்கம் அபகரிப்பு சம்பவத்தை தொடர்ந்து கேரள ஐகோர்ட்டு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. ஏற்கனவே சன்னிதானத்தில் பக்தர்கள் புகைப்படம், வீடியோ எடுக்க தடை விதித்திருந்தது.

இந்தநிலையில் சன்னிதானத்தில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்க பத்திரிகையாளர்களுக்கும் கேரள ஐகோர்ட்டு தடை விதித்து அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவு பத்திரிகையாளர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## மும்பையில் பின்னோக்கி சென்ற பஸ் மோதி 4 பேர் பலி; 9 பேர் படுகாயம்




மும்பை, ஜன.1

மும்பை பாண்டுப்பில் உள்ள ரயில் நிலையம் அருகே பஸ் நிறுத்தத்தில் ஏராளமான பயணிகள் பஸ்சுக்காக காத்திருந்தனர். அப்போது மாநகர பஸ் ஒன்று அங்கு வந்தது. அந்த பஸ்சை டிரைவர் சந்தோஷ் ரமேஷ் சாவந்த் (52) ஓட்டினார். பகவான் பாவ் கரே (47) கண்டக்டராக பணியில் இருந்தார்.பஸ் நிறுத்தம் அருகே வந்ததும், எதிர்பாராத விதமாக பஸ் கட்டுப்பாட்டை இழந்து பின்னோக்கி சென்றது.

அப்போது அந்த வழியே நடந்து சென்று கொண்டிருந்த 13 பேர் மீது பஸ் மோதி பலத்த காயமடைந்தனர். பின்னர் பஸ் ஒரு மின்கம்பத்தில் மோதி நின்றது. உடனடியாக அப்பகுதியினர் திரண்டு காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக ராஜாவாடி மற்றும் எம்.டி. அகர்வால் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதில் 3 பெண்கள் உள்பட 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இது தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்து குறித்த தகவல் கிடைத்ததும், தீயணைப்புப் படையினர், போலீசார் மற்றும் 108 ஆம்புலன்ஸ் குழுக்கள் சம்பவ இடத்திற்கு வந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். விபத்தில் பலியானவர்களுக்கு மராட்டிய முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் இரங்கல் தெரிவித்துள்ளார். பலியானவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் நிவாரணம் வழங்க அவர் உத்தரவிட்டார். இதனிடையே, விபத்தை ஏற்படுத்திய பஸ் டிரைவர் சந்தோஷ் ரமேஷ் சாவந்த் கைது செய்யப்பட்டார்.

# இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை,ஜன.1

தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளுக்கும், அனைத்து மக்களுக்கும் எனது உளமார்ந்த இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

ஒரு கையில் வாளேந்தி உரிமை காத்தும், மறு கையில் கேடயமேந்தி மக்கள் நலன் காத்தும், ஜனநாயகப் போர்க்களத்தில் நிற்கும் நமக்கு வெற்றி ஒளிவீசும் நம்பிக்கை தரும் புத்தாண்டாக மலர்கிறது 2026!



புத்தாண்டுத் தொடக்கம் முதலே ‘சமத்துவம் பொங்கட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!’ எனக் கோலமிட்டு திராவிடப் பொங்கல் களை கட்டட்டும்! உடன்பிறப்புகள் நடத்தும் விளையாட்டுப் போட்டிகள், கலை, இலக்கிய நிகழ்வுகள் என திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவதற்கான தொடக்கமாக இந்தப் புத்தாண்டைக் கொண்டாடுவோம்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கருப்புக்கொடி ஏந்தி முதல்வருக்கு அண்ணாமலை எதிர்ப்பு



கோவை

திருப்பூர் அருகே, இடுவாய், சின்னக்காளிபாளையம் கிராமத்தில், மாநகராட்சி குப்பையை கொட்ட எதிர்ப்பு தெரிவித்து, போராடியவர்கள் மீது வழக்குப்பதியப்பட்டு, சிலர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதை கண்டித்து, தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை தலைமையில், திருப்பூரில் ஆர்ப்பாட்டம் நடந்தது. அப்போது, பல்லடம் வரும் முதல்வரை கண்டித்து கருப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பு தெரிவிப்போம் என அண்ணாமலை அறிவித்திருந்தார். இதன்படி, நேற்று பல்லடம் வந்த முதல்வர் ஸ்டாலினுக்கு, கோவையில் உள்ள தன் வீட்டின் முன் நின்று அண்ணாமலை கருப்புக்கொடி ஏந்தி எதிர்ப்பு தெரிவித்தார்.

## முல்லைப் பெரியாற்றில் அடித்துச் செல்லப்பட்ட பெண் - உடல் சடலமாக மீட்பு

தேனி மாவட்டம் கூடலூர் அருகே உள்ள லோயர் கேம்பை சேsaர்ந்த சங்கர் மற்றும் அவரது மனைவி கணேஸ்வரி ஆகியோர் நேற்று முல்லைப் பெரியாற்றில் அடித்துச் செல்லப்பட்டனர் . தகவல் அறிந்ததும் தீயணைப்பு மற்றும் காவல்துறையினர் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டனர் . நேற்று இரவுவரை இருவரும் கிடைக்காத நிலையில்,



இன்று காலை கணேஸ்வரி என்பவரின் உடல் காஞ்சிமரத்துறை பகுதியில் பெண் சடலமாக மீட்கப்பட்டது .

சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். சங்கரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது .

## காட்டு யானை தாக்குதல் - குள்ளப்ப கவுண்டன்பட்டியில் நாட்டு மொச்சை, தென்னை பயிர்கள் கடும் சேதம்

தேனி மாவட்டம் குள்ளப்ப கவுண்டன்பட்டி பெருமாள் கோவில் அருகே உள்ள மட்டப்பாறை பகுதியில், காட்டு யானைகள் புகுந்து விவசாய நிலங்களை நாசம் செய்துள்ளன . சுமார் 4 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த நாட்டு மொச்சை பயிர்கள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

இரவு நேரத்தில் ஏற்பட்ட யானை தாக்குதலில் வளர்ச்சியடைந்த நிலையில் இருந்த பயிர்கள் நசுங்கியதுடன், அருகிலிருந்த தென்னை மரங்களும் சேதமடைந்துள்ளன . ஒரு கிலோ நாட்டு மொச்சை ரூ.100க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் , மொத்தமாக சுமார் ரூ.2 லட்சம் மதிப்பிலான இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே வறட்சியும், உற்பத்திச்செலவு உயர்வும் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகள், இந்த திடீர் சேதத்தால் கடும் வேதனையில் உள்ளனர். யானை அச்சுறுத்தலை கட்டுப்படுத்த வனத்துறை உடனடி நடவடிக்கை எடுக்கவும் , சேதமடைந்த பயிர்களுக்கு விரைவில் இழப்பீடு வழங்கவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் .

## தேனி மாவட்ட காவல்துறையின் எச்சரிக்கை





புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது சாலையில் சாகசம் செய்வது மற்றும் குடிபோதையில் மக்களை அச்சுறுத்தும் வகையில் வாகனத்தை இயக்குவது குற்றமாகும் மீறினால் கடுமையான அபராதம் விதிக்கப்படும், வாகனம் பறிமுதல் செய்யப்படுவதோடு ஓட்டுனர் உரிமமும் தற்காலிகமாக ரத்து செய்யப்படலாம் என தேனி மாவட்ட காவல்துறை சார்பாக அறிவுறுத்தப்படுகிறது.

## முல்லைப் பெரியாற்றில் தம்பதி அடித்துச் செல்லப்பட்ட சம்பவம்: கணேஸ்வரி உடல் மீட்பு - சங்கரை தேடும் பணி நாளையும் தொடரும்

தேனி மாவட்டம் லோயர் கேம்பைச் சேர்ந்த சங்கர் மற்றும் அவரது மனைவி கணேஸ்வரி நேற்று முல்லைப் பெரியாற்றில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர் . இந்நிலையில் இன்று அதிகாலையில் சங்கரின் மனைவி கணேஸ்வரியின் உடல் மீட்கப்பட்டது .

இதனைத் தொடர்ந்து, சங்கரை கண்டுபிடிக்கும் முயற்சியாக உத்தமபாளையம் மற்றும் கம்பம் தீயணைப்புத் துறையினர், காவல்துறையினர் , கூடலூர் நகர மன்ற உறுப்பினர் தினகரன் மற்றும் உள்ளூர் இளைஞர்கள் இணைந்து முல்லைப் பெரியாற்றில் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டனர் . தண்ணீரின் அளவு குறைக்கப்பட்ட போதிலும் சங்கரை கண்டுபிடிக்க முடியவில்லை.

இதனால், சங்கரை தேடும் பணி நாளையும் தொடரும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





# இஸ்ரோ வரலாற்றில் 2026 மிகவும் முக்கியமான ஆண்டு வி.நாராயணன் தகவல்



சென்னை, ஜன.1

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெற்றிகரமான விண்வெளி சோதனைகளுடன் முன்னேறி வருகிறது.

2025ம் ஆண்டில் பல முக்கிய திட்டங்களை மேற்கொண்டுள்ள இஸ்ரோ, 2026ம் ஆண்டிலும் பல அற்புதங்களைச் சாதிக்கத் தயாராகி வருகிறது.

எனவே இந்த ஆண்டு இஸ்ரோவிற்கு மிக முக்கியமான ஆண்டாக பார்க்கப்படுறது.

2025 நிறைவடையும் நிலையில், இஸ்ரோ விஞ்ஞானிகள் புத்தாண்டில் தனது முழு கவனத்தையும் செலுத்தி வருகின்றனர். 2026ம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள பயணங்களின் வெற்றி எதிர்கால மனித விண்வெளிப் பயணத்திற்கு வலுவான அடித்தளத்தை அமைக்கும். அதனால் தான் இந்த ஆண்டை இஸ்ரோ மிகவும் முக்கியமானதாகக் கருதுகிறது என்று இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் கூறியுள்ளார்.

இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது:புத்தாண்டில் இஸ்ரோவின் மற்றொரு முக்கிய மைல்கல் பி.எஸ்.எல்.வி. சி62 ராக்கெட் மூலம் இ.ஓ.எஸ்.என்1 செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படுகிறது. தொடர்ந்து, இஸ்ரோவின் வடிவமைப்பின் அடிப்படையில் எச்.ஏ.எல் மற்றும் எல்&டியால் தயாரிக்கப்பட்ட பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டில் ஓசோன்சாட் 3ஏ செயற்கைக்கோள் முதல் காலாண்டில் விண்ணில் ஏவப்படுகிறது. நிலம் மற்றும் கடல் கண்காணிப்புக்காக வடிவமைக்கப்பட்ட இந்த செயற்கைக்கோள், வானிலை ஆய்வுகள் மற்றும் மீன்வளத்திற்கு பயனுள்ளதாக இருக்கும்.

வருகிற 2027ம் ஆண்டு 3 விண்வெளி வீரர்களை சுற்றுப்பாதைக்கு அனுப்பி மீண்டும் பத்திரமாக பூமிக்கு அழைத்து வரும் ககன்யான் திட்டத்துக்காக 3 ஆள் இல்லாத ராக்கெட்டை விண்ணில் ஏவி பரிசோதனை செய்ய இஸ்ரோ தயாராகி வருகிறது.

இதற்கான முதல் ராக்கெட்டை புத்தாண்டில் இஸ்ரோ விண்ணில் ஏவுகிறது. இதில் வியோமித்ரா என்ற பெண் ரோபோவும் பயணிக்கிறது. இந்த ரோபோ, விண்வெளி வீரர்களுக்கான பாதுகாப்பை முழுமையாக சோதிக்கும். இது இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணத்திற்கு முன் ஒரு சோதனைப் பணியாகும். தொடர்ந்து, எஸ்.எஸ்.எல்.வி. ராக்கெட் மூலம் ஒரு சிறிய செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படுகிறது.

தொடர்ந்து ஜி.எஸ்.எல்.வி. ரக ராக்கெட் மூலம் என்.வி.எஸ்03 (ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்.1எல்) என்ற வழி செலுத்தும் செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படுகிறது. இவை முதல் காலாண்டில் விண்ணில் ஏவ இஸ்ரோ திட்டமிட்டுள்ளது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

# பொங்கல் பரிசு டோக்கன்களை வீடுவீடாக வழங்க வேண்டும் கூட்டுறவுத்துறை சுற்றறிக்கை



சென்னை, ஜன.1

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் நந்தகுமார், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்களுக்கு அனுப்பி உள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

ரேஷன் கடைகள் மூலம் பொங்கல் பரிசு தொகுப்பு ரேஷன் அட்டைதாரர்களுக்குவழங்குவதுதொடர்பானமுன்னேற்பாடுகளை மேற்கொள்ளவும் மற்றும் டோக்கன் வினியோகம் குறித்தும் பின்வரும் அறிவுரைகளை பின்பற்றி இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட அறிவுறுத்தப்படுகிறது.

மண்டலங்களில் செயல்படும் நியாயவிலைக்கடைகளுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளுக்கு ஏற்ப ஜனவரி 2ந் தேதிக்குள் டோக்கன்கள் அச்சிடப்பட்டு வினியோகம் செய்திட ஏதுவாக தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பொங்கல் பரிசுத் தொகுப்பு பெற வேண்டிய நாள் மற்றும் நேரம் குறிப்பிட்டு டோக்கன்களை விற்பனையாளர்கள் ரேஷன் அட்டைதாரர்களின் இல்லங்களுக்குச் சென்று வழங்கப்பட வேண்டும். முதல் நாள் முற்பகல் 100 ரேஷன் அட்டைதாரர்களுக்கும், பிற்பகல் 100 ரேஷன் அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு வினியோகம் செய்திட ஏதுவாக டோக்கன்கள் வழங்கப்பட வேண்டும்.

சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழக்கூடிய ரேஷன் கடைகள், அதிக கூட்ட நெரிசல் ஏற்படக்கூடிய ரேஷன்கடைகள் போன்ற கடைகளின் பட்டியல்கள் முன்கூட்டியே தயார் செய்யப்பட்டு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அல்லது காவல்துறை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு போதிய போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதை உறுதி செய்திட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மேம்பால கேபிளை பிடித்து இறங்க முயற்சி.. அந்தரத்தில் இருந்து கீழே விழுந்த வாலிபர்



ஆவடி, ஜன. 1

சென்னை ஆவடி அருகே நெமிலிச்சேரி சந்திப்பில் வண்டலூர் மீஞ்சூர் வெளிவட்ட சாலையில்உள்ளமேம்பாலத்தில் இருந்துஓடிசாமாநிலத்தை சேர்ந்தவர் நீலகொண்டமாஜி என்பவர் இன்டர்நெட் கேபிள் மூலம் சாலையின் கீழே இறங்க முயற்சி செய்தார். இதனை கண்ட வாகன ஓட்டிகள் மற்றும் போலீசார் அவரை எச்சரித்தனர். இருந்த போதிலும் எதையும் காதில் வாங்காத அவர், இன்டர்நெட் கேபிள் மூலம் சாலையில் சினிமா பாணியில் இறங்க முயற்சி செய்தார்.

அப்போது திடீரென கேபிள் ஒயர் அறுந்து விட்டது. ஒற்றை ஒயரை பிடித்தபடி 60 அடி உயரத்தில் இருந்து அவர் கீழே விழுந்தார்.

நல்லவேலையாக அவர் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார். அவரைஅருகே இருந்த போலீசார் மீட்டு விசாரணைசெய்து வருகின்றனர்.

சுமார் 60 அடி மேம்பாலத்தின் மீது இருந்து சாகசம் செய்த வாலிபர் மன நலம் பாதிக்கப்பட்டவரா அல்லது சாகசம் செய்ய குதித்தாரா அல்லது குற்றச் செயலில் ஈடுபட்டு தப்பிக்க மேம்பாலத்தின் மீது இருந்து குதித்தாரா என விசாரித்து வருகின்றனர்.

இதுதொடர்பான நெஞ்சை பதைபதைக்க வைக்கும் வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# தமிழ்மொழியை பிரபலமாக்குவதில் பிரதமர் மோடியை போல யாரும் செயல்பட முடியாது: கவர்னர் ஆர்.என்.ரவி



ராமேசுவரம், ஜன.1

ராமேசுவரத்தில் நேற்று நடந்த காசி தமிழ் சங்கமம் நிறைவு விழாவில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி தமிழிலேயே பேசினார். அவர் கூறியதாவது:

இந்த விழா ஒவ்வொரு ஆண்டும் மேலும் மேலும் பிரபலம் அடைந்து வருகிறது. காசியும், தமிழும் பல ஆயிரம் ஆண்டுகள் பழமையானவை. பல நூறு ஆண்டுகளாக தொடர்பில் உள்ளவை. தென்நாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று சிவனை தமிழர்கள் பாடுகின்றனர்.

இந்த விழாவின் மூலமாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமிழ் கற்கும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தி பேசும் 300 மாணவர்கள் தற்போது இங்கு வந்து தமிழ் கற்கின்றனர். தமிழ் மொழி மிகவும் சக்தி வாய்ந்தது, அழகானது என்பது எல்லோருக்கும் தெரியும்.

உலக அரங்கில் தமிழ் மொழியை பிரபலமாக்குவதிலும், பெருமை சேர்ப்பதிலும் பிரதமர் மோடியைபோல யாரும் செயல்பட முடியாது. இதற்காக தமிழக மக்கள் சார்பில் பிரதமர் மோடிக்கு நன்றியை தெரிவிக்கிறேன். தமிழ் மக்களின் இதயத்துடிப்பை நன்றாக அறிந்த துணை ஜனாதிபதி இங்கே இருக்கிறார். இவ்வாறு அவர் பேசினார்.

# ரிப்பன் மாளிகை அருகே மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மை பணியாளர்கள் கைது



சென்னை, ஜன.1

தூய்மைப் பணிகளை தனியாரிடம் ஒப்படைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பணி நிரந்தரம் கோரியும் சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் கடந்த 2 மாதங்களாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களுடன் அரசு தரப்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் இதுவரை சுமூகமான தீர்வு எட்டப்படாததால் போராட்டம் தொடர்ந்து வருகிறது.

இந்த சூழலில் இன்று காலையில் திமுக தலைமையகமான அண்ணா அறிவாலயம் முன்பு தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் நடத்தினர். அவர்களை போலீசார் கைது செய்தனர். ஒரு தரப்பினர் கைது செய்யப்பட்ட நிலையில், மற்றொரு தரப்பினர் சென்னை அண்ணா அறிவாலயம் முன்பு மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அந்த பகுதியில் 100க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர்.

அண்ணா அறிவாலயத்தைத் தொடர்ந்து, சென்னை மெரினாவில் உள்ள முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதி நினைவிடத்தில்தூய்மைப் பணியாளர்கள்போராட்டத்தில் ஈடுபட்டனர். தூய்மைப் பணிகளை தனியாரிடம் ஒப்படைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பணி நிரந்தரம் கோரியும் பதாகைகளை ஏந்தி, முழக்கமிட்டு போராட்டம் நடத்தினர். இதைத் தொடர்ந்து போலீசார் அவர்களை கைது செய்ய முயன்றனர். அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மற்றும் போலீசார் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் அந்த பகுதியில் பரபரப்பு நிலவியது.

இந்நிலையில் சென்னை ரிப்பன் மாளிகை அருகே இரவில் தூய்மை பணியாளர்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். தூய்மை பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் ரிப்பன் மாளிகை அருகே போலீசார் குவிக்கப்பட்டனர். இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மை பணியாளர்களை பேருந்துகளில் ஏறக் கூறியபோது, அவர்கள் மறுத்ததால் போலீசார் அவர்களை குண்டுகட்டாக கைது செய்தனர்.

# சென்னை சென்டிரல் கும்மிடிப்பூண்டி கடற்கரை மின்சார ரெயில்களின் நேரம் மாற்றம்



கும்மிடிப்பூண்டி, ஜன.1

சென்னை சென்டிரல், கும்மிடிப்பூண்டி, கடற்கரைக்கு செல்லும் ரெயில்களின் நேரத்தை மாற்றியமைத்து புதிய பட்டியலை தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ளது. நாளை (வியாழக்கிழமை) முதல் 9 மின்சார ரெயில் சேவைகளில் நேரம் மாற்றம் செய்யப்பட உள்ளது.

அதன் விவரம் வருமாறு:

★திருத்தணியில்இருந்து புறப்பட்டு சென்டிரல் செல்லும் மின்சார ரெயில், அரக்கோணத்திற்குகாலை 5.50 மணிக்கு பதிலாக காலை 5.55 மணிக்கு சென்றடையும்.

★திருத்தணியில்இருந்து புறப்பட்டு சென்டிரல் செல்லும் மின்சார ரெயில், அரக்கோணத்திற்கு மதியம் 2.40 மணிக்கு பதிலாக மதியம் 2.55 மணிக்கு சென்றடையும்.

★ அரக்கோணத்தில் இருந்துகாலை10மணிக்கு புறப்பட்டு சென்டிரல் வரும் மின்சார ரெயில், அதற்கு மாற்றாக காலை 9.55 மணிக்கு அரக்கோணத்தில் இருந்து புறப்படும்.

★ சென்னை கடற்கரையில் இருந்து இரவு 8 மணிக்கு புறப்படும் மின்சார ரெயில், இரவு 8.05 மணிக்கு புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும்.

★ சூலூர்பேட்டையில் இருந்து இரவு 9 மணிக்கு புறப்படும் மின்சார ரெயில், இரவு 9.05 மணிக்கு புறப்பட்டு சென்டிரல் செல்லும்.

★ கும்மிடிப்பூண்டியில் இருந்து இரவு 9.25 மணிக்கு புறப்படும் மின்சார ரெயில், இரவு 9.40 மணிக்கு புறப்பட்டு சென்டிரல் செல்லும்.

செங்கல்பட்டிலிருந்து மாலை 6 மணிக்கு புறப்படும் மின்சார ரெயில் 6.05 மணிக்கும், 6.40 மணிக்கு புறப்படும் ரெயில் 6.30 மணிக்கும்,10.10மணிக்கு புறப்படும் ரெயில் 10.20 மணிக்கும் புறப்பட்டு சென்னை கடற்கரை செல்லும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மின்சார வாகனங்களுக்கான சாலை வரிச்சலுகை நீட்டிப்பு தமிழக அரசு அரசாணை வெளியீடு



சென்னை, ஜன. 1

தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

மின்சார வாகனங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த வரி விலக்கு சலுகையானது இன்றுடன் (புதன்கிழமை) முடிவடைகிறது. இந்த நிலையில், இந்த 100 சதவீதம் வரி விலக்கானது வருகிற ஜனவரி 1ந்தேதி (நாளை) முதல் 2027ம் ஆண்டு டிசம்பர் 31ந்தேதி வரை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது.

இந்த வரி விலக்கு சலுகையானது, மத்திய மோட்டார்வாகன விதிகளின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து விதமான போக்குவரத்து வாகனங்கள் மற்றும் போக்குவரத்து அல்லாததனிநபர்பயன்பாட்டு வாகனங்கள் என அனைத்து வகை மின்சார வாகனங்களுக்கும் பொருந்தும்.

தமிழ்நாட்டில் மின்சார வாகனங்களின் பயன்பாடு கணிசமாக அதிகரித்து வருகிறது. 2025ம் ஆண்டில் இது சுமார் 7.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த வேகத்தைத் தக்கவைக்கவும், 'தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை 2023'ன் நோக்கங்களை எட்டவும், வாகன உற்பத்தியாளர்கள் மற்றும் போக்குவரத்து ஆணையரின் கோரிக்கையை ஏற்று அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம் மின்சார வாகனங்களைவாங்குவோர்சாலை வரி செலுத்துவதில் இருந்து முழுமையாக விலக்கு பெறுவர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரசு இசேவை, ஆதார் சேர்க்கை மையங்கள் 2 நாட்கள் செயல்படாது




சென்னை,ஜன.1

அரசு இசேவை மற்றும் ஆதார் சேர்க்கை மையங்களில் மென்பொருள் பராமரிப்பு மற்றும் தணிக்கை பணிகள் நடைபெற உள்ளதால், வரும் 31.12.2025 மற்றும் 01.01.2026 ஆகிய இரண்டு நாட்கள் மேற்படி மையங்கள் செயல்படாது எனதெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனத்தால் நடத்தப்படும் அனைத்து அரசு இசேவை மற்றும் ஆதார் சேர்க்கை மையங்களில் மென்பொருள் பராமரிப்பு மற்றும் தணிக்கை பணிகள்நடைபெற உள்ளதால், வரும் 31.12.2025 மற்றும் 01.01.2026 ஆகிய இரண்டு நாட்கள் மேற்படி மையங்கள் செயல்படாது என தெரிவிக்கப்படுகிறது. மேற்படி, மையங்கள் 02.01.2026 முதல் வழக்கம்போல் தொடர்ந்து செயல்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திடீரென தானாக நகர்ந்த லாரி.. தடுக்க சென்ற தொழிலாளி உடல் நசுங்கி பலி அதிர்ச்சி வீடியோ



ஆரணி, ஜன.1

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த தச்சூர் மோட்டு குடிசைகிராமத்தைச்சேர்ந்தவர் சிவலிங்கம் (65). இவரது மனைவி விஜயா. இவர்களுக்கு ஆனந்தி, ஜெயலட்சுமி, தனலட்சுமி என்ற 3 மகள்கள் உள்ளனர். சிவலிங்கம் ஆரணி தேவிகாபுரம் நெடுஞ்சாலையில் உள்ள அட்டைப்பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் கூலி வேலை செய்து வந்தார்.

நேற்று காலை குடோனுக்கு 2 லாரிகளில் வந்த அட்டைப்பெட்டிகளை தொழிலாளர்கள் இறக்கிக் கொண்டு இருந்தனர். அப்போது பக்கவாட்டில் நின்ற லாரியை அதன் டிரைவர் என்ஜினை 'ஆப்' செய்யாமலேயே கீழே இறங்கி விட்டதாககூறப்படுகிறது.

இந்த நிலையில் அந்த லாரி திடீரென தானாக முன்னோக்கி நகர்ந்ததை கவனித்த சிவலிங்கம், சபீர் உள்பட 3 தொழிலாளர்களும் கைகளால் நிறுத்த முயன்றனர். இதில் சிவலிங்கம் தனது முழு பலத்தையும் உபயோகப்படுத்தி லாரியின் முன்னால் 2 கைகளால் தடுத்துக் கொண்டே நிறுத்த போராடினார். ஆனால் அந்த லாரி நகர்ந்து கொண்டே வந்தது.

இந்த நிலையில் அந்த லாரியானது சிவலிங்கத்துடன் பின்னால் நின்ற லாரியில் வந்து மோதியபோது 2 லாரிகள் இடையே சிக்கி அவர் உடல் நசுங்கி பலியானார். சபீர் உள்பட 2 தொழிலாளர்களும் பக்கவாட்டில் நின்று தடுத்த நிலையில் ஒதுங்கிக்கொண்டதால் அவர்கள் உயிர்தப்பினர். இந்த சம்பவத்தில் லாரி என்ஜினை 'ஆப்' செய்யாமல் தானாக நகர்ந்து வந்து தொழிலாளி உயிரிழப்புக்கு காரணமான லாரி டிரைவரிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அயனாவரம்பெரம்பூர் சுரங்கம் தோண்டும் பணி வெற்றிகரமாக நிறைவு மெட்ரோ நிர்வாகம் தகவல்

சென்னை, ஜன.1

சென்னை மெட்ரோ நிர்வாகம் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் கட்டம்2 வழித்தடம் 3ல் மேலகிரி என பெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெற்றிகரமாக பணியை முடித்து பெரம்பூர் நிலையத்தை வந்தடைந்தது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், கட்டம் 2ல் 118.9 கி.மீ. நீளத்திற்கு மேலும் 3 வழித்தடங்களை கட்டி முடிக்க திட்டமிட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் கட்டம் 2 வழித்தடம் 3ல் சுரங்கப்பாதை கட்டுமான பணிகளில், சுரங்கம் தோண்டும் இயந்திரம் மேலகிரி அயனாவரம் நிலையத்திலிருந்து பெரம்பூர் நிலையம் வரையிலான (down line) 861 மீட்டர் நீளமுள்ள சுரங்கப்பாதை அமைக்கும் பணியை முடித்து பெரம்பூர் நிலையத்தை வந்தடைந்தது.

இது Tata Projects நிறுவனத்தின் TU02 ஒப்பந்தப் பிரிவில் எட்டாவது சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் வெற்றிகரமான பணி நிறைவு ஆகும். சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தனது இரண்டாம் கட்டத் திட்டத்தில் இதுவரை மொத்தம் 19 சுரங்கம் தோண்டும் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

சுரங்கம் தோண்டும் இயந்திரம் மேலகிரி, பெரம்பூர் ரெயில் நிலைய தண்டவாளங்கள் மற்றும் நடைமேடைகளுக்கு அடியில், அதிக மக்கள் தொகை கொண்ட மற்றும் நெருக்கமான கட்டிடங்கள் நிறைந்த பகுதிகளுக்கு அடியில் சுரங்கப்பாதை அமைக்கும் பணியை வெற்றிகரமாக முடித்தது. சுரங்கப்பாதை அமையும் வழியில் இருந்த 32க்கும் மேற்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் (Bore wells) முறையாகக் கையாளப்பட்டன. பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில், அக்கிணறுகளுக்குப் பதிலாக மாற்று நீர் ஆதாரங்கள் மெட்ரோ நிர்வாகத்தால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், Tata Projects நிறுவனம் மற்றும் பொது ஆலோசகர் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தளத்தில் இருந்து பார்வையிட்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கன் என்ற மனநிலை மிகவும் ஆபத்தான போக்காகும்: பா.ரஞ்சித் பதிவு



சென்னை, ஜன.1

திருவள்ளூர்மாவட்டம், திருத்தணியில் நடந்த மனிதமற்ற கொடூர செயலை கண்டு நெஞ்சம் பதறுகிறது. அண்மைக்காலமாகத் தமிழகத்தில் அதிகரித்துவரக்கூடிய போதைப் பொருள் கலாச்சாரத்தைத் தடுக்கத் தவறிய ஆட்சியாளர்களுடைய மெத்தனப் போக்கே இதுபோன்ற சம்பவங்களுக்கு முக்கிய காரணம். இத்தகைய குற்றச் செயல்கள் பள்ளி,கல்லூரிகளிலும் தலைவிரித்து ஆடுவதை அலட்சியமாகப் பார்த்ததன் விளைவுதான் இன்றைக்குப் பொதுவெளியில் எந்தவோர் அச்சமுமின்றி வெளிப்படும் கும்பல் மனநிலைக்குக் காரணம்.

இந்நிலைக்கு நாமும் பொறுப்பேற்க வேண்டும் என்பதைஉணர்ந்துசெயல்படக்கூடிய தருணமிது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பது தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினுடைய அடிநாதம்.அதை எவ்வகையிலும் நாம் சிதைத்துவிடக் கூடாது. நமக்குள் இருக்கிற வேறுபாடுகளைக் களைந்தெரிந்து, சகோதரத்துவத்தைப் பேண வேண்டும். அதைவிடுத்து வடக்கன் என்கிற வெறுப்பு மனநிலையில் செயல்படுவது சமூகசீர்குலைவிற்கேவழி வகுக்கும்.

இந்த வடக்கன் என்ற மனநிலை மிகவும் ஆபத்தான போக்காகும். 'நகைச்சுவை'பதிவுகள்தொடங்கி கடுமையான சொல்லாடல்கள் வரை சமூக வலைதளங்களிலும் நம் அன்றாடப் பேச்சுகளிலும் இந்த மனநிலை வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது. நம் இடத்திற்குப் பிழைக்க வந்தவர்களை, நம் வாய்ப்புகளைப் பறித்துக்கொண்டவர்களாகக் கருதும் மோசமான மனநிலைஉலகம்முழுவதுமே இருக்கிறது. இதைக்களைவதற்கான ஒரே வழி, மக்களுக்கிடையேயான சகோதரத்துவத்தை வளர்த்தெடுப்பதுதான். இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுதிப்படுத்தியுள்ள தனிநபர் சுதந்திரத்தையும் உரிமையையும் சக மனிதர்கள் ஏற்க வேண்டும், அதுவே அறமும் கூட.

மேலும், பொதுவெளியில் கும்பலாகச் சேர்ந்து கொண்டு ஓர் அப்பாவி இளைஞனைக் கொடூரமான ஆயுதங்களால் தாக்குவதை வீடியோ எடுத்து அதைத் தற்பெருமையாகக் கருதி, சமூக வலைதளத்தில் பகிர்வோர்களைக் காவல்துறை இனங்கண்டு கைது செய்து அவர்களுக்கு அதிகபட்ச தண்டனை பெற்று தர வேண்டும்.

மேலும், சமூக வலைதள மோகத்தில் சிறார்களும் இளைஞர்களும் சமூகத்தில் பதற்றத்தை ஏற்படுத்தும் விதத்திலும்,

வன்முறை தூண்டும் வகையிலும் கும்பலாகச் சேர்ந்துகொண்டு ரீல்ஸ் பதிவிடுவதைத் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை ஆட்சியாளர்களும் காவல்துறையினரும் தாமதிக்காமல் முன்னெடுக்க வேண்டும்.

போதை, ஆயுதக் கலாச்சாரம், சமூகப் பிரிவினை எனத் தனித்தனி காரணிகளைக் கொண்டு இப்பிரச்சினைகளை அணுகக் கூடாது. இவை எல்லாமே ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையவை. இனி இது போன்ற சம்பவங்கள் நிகழ எந்தவகையிலும் நாம் அனுமதிக்கக் கூடாது என்று தமிழக அரசை வலியுறுத்துகின்றோம்"

இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

# ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டம்: சென்னையில் போக்குவரத்து மாற்றம்

சென்னை ஜன.1

உலகம் முழுவதும் நாளை மறுதினம் ஆங்கில புத்தாண்டு கொண்டாடப்பட உள்ளது. 2026ம் ஆண்டு புத்தாண்டை கொண்டாட உலக மக்கள் தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில், ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டங்களையொட்டி சென்னையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சென்னை போக்குவரத்து காவல்துறை வெளியிட்ட அறிவிப்பில்

சென்னை மெரினா கடற்கரை, எலியட்ஸ் கடற்கரை இணைப்புச் சாலைகளில் போக்குவரத்து மாற்றப்படுகிறது.

கடற்கரை உட்புற சாலையில் டிசம்பர் 31ம் தேதி இரவு 7 மணி முதல் ஜனவரி 1ம் தேதி காலை 6 மணி வரை போக்குவரத்து மூடப்படும்

சென்னையில் அனைத்து மேம்பாலங்களும் டிசம்பர் 31ம் தேதி இரவு 10 மணி முதல் ஜனவரி 1ம் தேதி காலை 6 மணி வரை மூடப்படும்

கடற்கரை உட்புற சாலையில் டிசம்பர் 31ம் தேதி இரவு 7 மணி முதல் வாகனங்கள் நிறுத்த அனுமதிக்கப்படாது.

அனைத்து வாகனங்களும் கலங்கரை விளக்கம் சந்திப்பு வழியாக மட்டுமே வெளியே செல்ல அனுமதிக்கப்படும்

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் கஞ்சா நடமாட்டமே இல்லை என்று கூச்சம் இல்லாமல் பேசியிருக்கிறார் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அண்ணாமலை



சென்னை ஜன.1

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழகத்தில் எங்கேயுமே கஞ்சா நடமாட்டமே இல்லை என்று கொஞ்சம் கூட கூச்சமே இல்லாமல் பேசியிருக்கிறார் திமுக அமைச்சர் மா.சுப்பிரமணியன். முதல் அமைச்சர் ஸ்டாலின் நடத்தும் நடைபயிற்சி ஷூட்டிங்கிற்கான ஏற்பாட்டிலேயே தனது முழு நேரத்தையும் செலவிடுவதால், அமைச்சருக்கு உண்மை நிலை தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

நேற்றைய தினம், திருத்தணியில், 17 வயது சிறுவர்கள், கஞ்சா போதையில் ஒரு வடமாநில இளைஞரை அரிவாளால் கடுமையாக வெட்டிய காணொளியை, அமைச்சர் பொய் என்கிறாரா? தமிழகத்தின் பல பகுதிகளில்கஞ்சாவிற்பனை, கடத்தல் மற்றும் வைத்திருப்பு தொடர்பான வழக்குகள் தொடர்ந்து பதிவாகி வருகின்றன. இந்த ஆண்டில் மட்டுமே, தூத்துக்குடியில் திமுக கவுன்சிலரின் மகன் கஞ்சா வழக்கில் கைது செய்யப்பட்ட சம்பவம், சென்னை, ஆவடி பகுதியில் ஆயிரக்கணக்கான கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது, ராமநாதபுரம், திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில், கஞ்சா விற்பனை மற்றும் கடத்தல் வழக்குகளில் நூற்றுக்கணக்கான கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு பலர் கைது செய்யப்பட்டுள்ளது, கஞ்சா விற்பனை வழக்குகளில் சிறை தண்டனை விதித்து நீதிமன்றமே தீர்ப்பளித்துள்ளது என, இவை அனைத்தும் நாம் நாள்தோறும் படிக்கும் செய்திகள்.

கோவையில் கல்லூரி மாணவர் விடுதிகளில் போலீசார் நடத்திய சோதனையில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களும் ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மாணவர் விடுதிகள் வரை கஞ்சா விற்பனை ஊடுருவியிருப்பது, போதைப் பொருள் எவ்வளவு ஆழமாக தமிழகத்தில் பரவியுள்ளது என்பதற்கான நேரடி சாட்சி. கல்வி வளாகங்களே பாதுகாப்பற்ற நிலையில் இருக்கும்போது, கஞ்சா புழக்கம் இல்லை என்று பேசுவது பொது மக்களுக்குச் செய்யும் துரோகம். கஞ்சா விற்பனை மற்றும் புழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தோல்வியடைந்த திமுக அரசு, இன்று உண்மையை மறைத்து தப்பிக்க முயல்கிறது.

போதைப்பொருள் சட்ட ஒழுங்கு பிரச்சினை மட்டும் அல்ல. அது தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை சிதைக்கும் சமூகப் பேரழிவு. கஞ்சா கடத்துபவர்கள் மீதும் விற்பனை செய்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, முழு பூசணிக்காயைச் சோற்றில்மறைக்கஅமைச்சர் மா.சுப்பிரமணியன் முயற்சிப்பது வெட்கக்கேடு. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# மது அருந்த பணம் தராததால் ஆத்திரம்... தோசைக் கரண்டியால் மனைவியை அடித்துக்கொன்ற தொழிலாளி



திருவாரூர் ஜன.1

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அருகே உள்ள ஆவூர் காந்தி நகர் பகுதியை சேர்ந்தவர் பரதன் (31 வயது). இவருக்கும், சுந்தரி என்பவருக்கும் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. பரதனுக்கு குடிப்பழக்கம் இருந்ததால் கணவன், மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. அதேபோல் சம்பவத்தன்றும் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

ஏற்கனவே குடித்துவிட்டு போதையில் வந்த பரதன், மேலும்மதுஅருந்த மனைவியிடம் பணம் கேட்டுள்ளார். அவர் பணம் தராததால் ஆத்திரமடைந்த பரதன், வீட்டில் இருந்த தோசைக் கரண்டியால் சுந்தரியின் தலையில் தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் வலியால் துடித்த சுந்தரியின் அலறல் சத்தம் கேட்டு வந்த அக்கம், பக்கத்தினர் காயமடைந்த சுந்தரியை மீட்டு சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சுந்தரி பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த வலங்கைமான் போலீசார் வழக்குப்பதிவு செய்து பரதனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னை: நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு



சென்னை, ஜன.1

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாடுகள் குறித்து, இன்று (30.12.2025) சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப்பொறியாளர்கள்பங்குபெற்றனர். ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து அமைச்சர், இதுவரை மேற்கொண்டப் பணிகள் குறித்தும், நிதி ஒதுக்கீடு செலவின விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, தக்க அறிவுரைகள் வழங்கினார்கள்.

சாலைப் பழுதுகள், அதாவது சாலையில் ஏற்பட்ட நொடிகள், பேட்ச் ஓர்க் செய்து நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்றும், சாலை ஓரங்களில் உள்ள முட்புதர்களை அகற்ற வேண்டும் என்றும் மலைப் பிரதேசங்களில் சாலை ஓரங்களில் உள்ள முட்புதர்களை அகற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

சாலைப் புருவங்கள்தார் சாலையின் மட்டத்தை விட உயரமாக உள்ளதால் மழைநீர் வடிய இயலாத நிலை உள்ளது. மழைநீர் வடிய ஏதுவாக சாலை புருவங்களை சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். கிலோ மீட்டர் கற்கள் மற்றும் பர்லாங் கற்கள் இல்லாத இடங்களை கண்டறிந்து அந்த இடங்களில் கற்களைவ நடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் பணிகளை எல்லாம் ஆய்வு செய்ய நியமனம் செய்யப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் உடனடியாக ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தினார். அமைச்சரின் தொடக்க உரையை தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாடுகளை ஒவ்வொன்றாக ஆய்வு செய்தார்.

இந்த இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் ரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்தியபிரகாஷ், சிறப்புஅலுவலர்(தொழில்நுட்பம்) ரா.சந்திரசேகர், முதன்மை இயக்குநர் ரா.செல்லதுரை, தரக்கட்டுப்பாடு இயக்குநர் எம்.சரவணன், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தோட்டக்கலைத்துறையை நீர்த்துப்போகச் செய்யும் திமுக அரசு நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜன.1

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தோட்டக்கலைத்துறையை நீர்த்துப்போகச் செய்வதோடு, சிறு குறு விவசாயிகளுக்குச் சரியான நிபுணத்துவ சேவையும் கிடைக்க முடியாத வகையில், உழவர் அலுவலர் தொடர்பு 2.0 திட்டத்தைக் கொண்டுவர திமுக அரசு முயற்சிப்பது கண்டனத்திற்குரியது.

பல்வேறு குளறுபடிகள் மூலம் தோட்டக்கலைத்துறையில் ரூ.141 கோடி ஊழல் செய்து சுரண்டித் தின்ற திமுக அரசு, தற்போது ஒரு படி மேலே சென்று தோட்டக்கலைத் துறையின் தனித்துவத்தை அழித்து, வேளாண்துறையின் ஒரு அங்கமாக மாற்றத் திட்டமிட்டு, ஒட்டுமொத்தமாகத் தோட்டக்கலைத்துறையை உருக்குலைக்க முடிவு செய்துள்ளது. மேலும், தோட்டக்கலை அலுவலர்களின் வாழ்வாதாரத்தைப் பறித்துப் போராடும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

தோட்டக்கலைத்துறை அலுவலர்கள், செவிலியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் என அனுதினமும் அரசு ஊழியர்களைப் போராடும் நிலைக்குத் தள்ளி அரசு இயந்திரத்தின் செயல்பாட்டைச் சீரழிப்பது தான் "நாடு போற்றும் நல்லாட்சியின்" அங்கமா? ஆட்சி அதிகாரத் திமிரில் அரசு ஊழியர்களை அலட்சியம் செய்யும் திமுக தனது அகம்பாவத்தாலேயே வீழ்ச்சியடையும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பூரில் காவலரைக் கத்தியால் தாக்க முயன்ற வாலிபரால் பரபரப்பு



திருப்பூர், ஜன.1

திருப்பூர் அரிசி கடை வீதி வீரராகவ பெருமாள் கோவிலில் வைகுண்ட ஏகாதசி விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவினை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வருகை தந்தனர். கூட்டத்தை கட்டுப்படுத்த பாதுகாப்பு பணியில் காவல்துறையினர் ஈடுபட்டிருந்தனர்.

காவல்துறையினர் கூட்டத்தை கட்டுப்படுத்திக் கொண்டிருந்தபோது அங்கு வந்த வாலிபர் காவலர் ஒருவரை கத்தியை கொண்டு குத்துவது போல மிரட்டல் விடுத்துள்ளார். இதனைக்கண்ட அப்பகுதி மக்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

வாலிபர் தன்னை தாக்க வருவதை கண்டு சுதாரித்துக்கொண்ட காவலர் தனது பெல்ட்டை கழற்றி அதன் மூலம் வாலிபர் தாக்காதவாறு தடுத்தார். இதனையடுத்து அங்கிருந்த மற்ற காவலர்கள் அந்த வாலிபரை சுற்றி வளைத்து கைது செய்தனர். தொடர்ந்து தாக்க வந்த வாலிபர் யார்? எனவும் வாலிபர் போதையில் காவலரை தாக்க முற்பட்டாரா? எனவும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

காவலரை வாலிபர் ஒருவர் கத்தியால் குத்த முயன்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த சம்பவம் குறித்த வீடியோ காட்சி இணையதளத்தில் பரவி பார்ப்பவர்களின் மனதை பதைபதைக்க வைக்கிறது.

# மயங்கி விழுந்த மாவட்டச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் பரப்புரையில் பரபரப்பு



திருவள்ளூர் ஜன.1

'மக்களை காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டையில் இன்று பிரசாரம் மேற்கொண்டார்.

பரப்புரை வாகனத்தில் இருந்து எடப்பாடி பழனிசாமி பேசிக் கொண்டிருந்தபோது, அவருக்கு அருகில் நின்று கொண்டிருந்த மாவட்ட செயலாளர் பலராமன் திடீரென மயங்கி விழுந்தார். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர் மீண்டும் பிராசர வாகனத்தில் ஏறிய பலராமன், எடப்பாடி பழனிசாமிக்கு வீர வாள் பரிசளித்தார்.

# வடமாநில இளைஞர் மீதான கொலைவெறித் தாக்குதல்: தமிழினத்திற்கான தலைகுனிவு சீமான்

சென்னை, ஜன.1

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

திருத்தணி சென்ற சென்னை புறநகர் ரெயிலில் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளி சிராஜ் மீது, போதைப் பழக்கத்திற்கு அடிமையான நான்கு இளம் சிறார்கள் கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ள கொடூர காட்சிகள் நெஞ்சை உலுக்குகிறது. திராவிட மாடல் ஆட்சியில் கட்டுக்கடங்காத போதைப்பொருள் புழக்கம், தமிழிளம் தலைமுறையை எந்த அளவிற்கு மிக மோசமாகச் சீரழித்துள்ளது என்பதையே புலம்பெயர் தொழிலாளி சிராஜ் மீதான கொடுந்தாக்குதல் காட்டுகிறது. அத்தனை சமூக அவலங்களுக்கும் அடிப்படையாக இருக்கும் போதைப் பொருட்கள் விற்பனையைத் தடுத்து நிறுத்தாது வேடிக்கை பார்க்கும் திமுக அரசின் கையாலாகாத்தனம் வன்மையான கண்டனத்துக்குரியது.

வட மாநிலத் தொழிலாளர்களால் தமிழ் மக்கள் கொடூரமாகத் தாக்கப்படுவது, கொலை மற்றும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுவது எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்ள முடியாத கொடுங்குற்றமோ

அதே அளவிற்கு, குடும்ப வறுமைக்காகப் பிழைப்பு தேடி வந்த வட மாநிலத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டிற்குள் தாக்கப்படுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத பெருங்கொடுமையாகும்.

தமிழ்நாட்டில் அரசே நடத்தும் மலிவுவிலை மதுக்கடைகளால் சட்டம்ஒழுங்கு முற்றாகச் சீரழிந்து கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட கொடுங்குற்றங்கள் வேகமாகப் பெருகிவருகின்றன. சொந்த இரத்த உறவுகள் கூடச் சிறு சிறு முன்பகைக்காக தங்களுக்குள் ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டு சாகும் சமூகப்பேரவலம் நிகழ்வதற்கு அரசு விற்கும் மது தான் அடிப்படை காரணமாகிறது. அதுமட்டுமின்றி திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு கஞ்சா விற்பனை கட்டுக்கடங்காத அளவிற்கு வளர்ந்து கஞ்சா விற்பனையின் தலைநகராக தமிழ்நாடு மாறியுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் படுகொலைகள், பாலியல் வன்கொடுமைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசு நடத்தும் டாஸ்மாக் மது மற்றும் கஞ்சா போதையில்தான் நடைபெறுகிறது. எனவே அரசு மது விற்பனையைத் தடை செய்தாலே தமிழ்நாட்டில் நடைபெறும் 95 சதவீத கொடுங்குற்றங்கள் நடைபெறாமலேயே தடுத்து நிறுத்த முடியும். அனைத்து சமூகக் குற்றங்களுக்கும் காரணமாகத் திகழும் மது விற்பனையைத் தடை செய்வதில் திமுக அரசிற்கு என்ன தயக்கம்? கடந்த அதிமுக ஆட்சிக்காலத்தில் மதுவிலக்கினை நடைமுறைப்படுத்த போராடிய திமுக, தமது ஆட்சிக்காலத்தில் அதனை நடைமுறைப்படுத்த மறுப்பது ஏன்? அதிமுக ஆட்சியில் குட்காவுக்கு எதிராக சட்டமன்றம் வரை பேசிய திமுக, தன்னுடைய ஆட்சியில் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு கஞ்சா விற்பனை குறித்து வாய் திறவாதது ஏன்?

'போதையின் பாதையில் இளைஞர்கள் செல்ல வேண்டாம்' என்று காணொளி பேசினால் மட்டும் போதைப்பொருட்கள் புழக்கம் ஒழிந்துவிடுமா? அல்லது தமிழ்நாட்டு இளைஞர்கள் அதைப் பயன்படுத்தாமல் தடுத்திடத்தான் முடியுமா? இளம் சிறார்கள் போதையில் கொடூர ஆயுதங்களுடன் தாக்கிய காணொளிக்கு திமுக அரசு என்ன பதில் கூறப்போகிறது? மது, கஞ்சா போதையைக் கட்டுப்படுத்தாது இன்னும் எத்தனை உயிர்களை திமுக அரசு பலி கொடுக்கப்போகிறது? பட்டப்பகலில் படுகொலைகளும், பாலியல் வன்கொடுமைகளும் நடைபெறாத நாட்களே இல்லை என்னும் அளவுக்குதமிழ்நாட்டின்சட்டம் ஒழுங்கு போதைப்பொருட்கள் புழக்கத்தால் முற்று முழுதாகச் சீரழிந்துள்ள நிலையில், திமுக அரசு கஞ்சா விற்பனையைத் தடுக்காததும், மது விலக்கை நடைமுறைப்படுத்த மறுப்பதும் ஏன்? மக்களின் நலனைவிட மதுவினால் வரும் வருமானம்தான் திமுக அரசிற்கு முதன்மையானதா? இதற்குப் பெயர்தான்

திராவிட மடலா? வெட்கக்கேடு?

ஆகவே, வடமாநில தொழிலாளி தம்பி சிராஜ் மீதான கொலைவெறித் தாக்குதல்போல இனி ஒரு கொடூர நிகழ்வு நடந்திடாமல் தடுத்திடவும், சீரழியும் தமிழிளம் தலைமுறையைக் காத்திடவும், மதுவிலக்கை உடனடியாக நடைமுறைப்படுத்தி டாஸ்மாக் கடைகளை இழுத்து மூடுவதோடு, கஞ்சா விற்பனையை முற்று முழுதாக தடுக்க போர்க்கால அடிப்படையில் தீவிர தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

1.1.2026

# கடந்த 25ந்தேதி அஜிதா ஆக்னல் தூக்க மாத்திரைகளை அதிகமாக சாப்பிட்டு தற்கொலைக்கு முயற்சி செய்தார்.



தூத்துக்குடி ஜன.1

தூத்துக்குடியை சேர்ந்த தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகி அஜிதா ஆக்னல் தனக்கு மாவட்ட செயலாளர் பதவி கிடைக்காததால் கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்னை பனையூரில் தவெக தலைவர் விஜய்யின் காரை வழி மறித்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். பின்னர் கட்சி மூத்த நிர்வாகிகளின் பேச்சுவார்த்தையை ஏற்று பனையூரில் இருந்து கலைந்து சென்றார்.

இந்த நிலையில் கடந்த 25ந்தேதி அவர் தூத்துக்குடியில் உள்ள தனது வீட்டில் தூக்க மாத்திரைகளை அதிகமாக சாப்பிட்டு தற்கொலைக்கு முயற்சி செய்தார். குடும்பத்தினர் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதனால் உடல்நலம் தேறி சாதாரண வார்டுக்கு மாற்றப்பட்ட அஜிதா ஆக்னல் நேற்று பூரண குணமடைந்து வீடு திரும்பினார்.

இந்த நிலையில் அஜிதா ஆக்னல் தனது எக்ஸ் தள பக்கத்தில் ஒரு பதிவு செய்துள்ளார். அதில், "கழகத் தோழர்கள் என் மீது கொண்ட பேரன்பினாலும் பிரார்த்தனைகளாலும் மட்டுமே பூரண குணமடைந்துள்ளேன். 2026ல் விஜய்யை முதல்வராக அரியணையில் ஏற்ற பலமடங்கு அதிக வேகத்தில் களப்பணியாற்ற உறுதி கொண்டுள்ளேன். வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு" என்று குறிப்பிட்டுள்ளார்.

# மார்கழி மாத பௌர்ணமி.. திருவண்ணாமலையில் கிரிவலம் செல்ல உகந்த நேரம்



திருவண்ணாமலை ஜன.1

திருவண்ணாமலையில் உலகபிரசித்திபெற்ற அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள 'அண்ணாமலை' என்று பக்தர்களால் அழைக்கப்படும் மலையை சுற்றி உள்ள 14 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட கிரிவலப்பாதையில் பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்கின்றனர். இவ்வாறு பவுர்ணமி நாட்களில் கிரிவலம் செல்வதற்கான நாள் மற்றும் நேரத்தை கோவில் நிர்வாகம் அறிவிக்கும்.

அவ்வகையில் மார்கழி மாத பவுர்ணமியை முன்னிட்டு கிரிவலம் செல்ல உகந்த நேரத்தை திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது. வருகிற 2ந்தேதி (வெள்ளிக்கிழமை) மாலை 6.45 மணிக்கு பவுர்ணமி தொடங்கி, 3ந் தேதி (சனிக்கிழமை) மாலை 4.43 மணிக்கு நிறைவு பெறுகிறது. இந்த நேரத்தில் கிரிவலம் செல்லலாம் என கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையொட்டி மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

# திருத்தணியில் வட மாநில இளைஞர் தாக்கப்பட்ட சம்பவம் நடந்தது என்ன? ஐ.ஜி.அஸ்ரா கர்க் விளக்கம்

சென்னை, ஜன.1

திருத்தணியில் வட மாநில இளைஞர் மீது 4 சிறார்கள் கஞ்சா போதையில் கொடூரமாக தாக்குதல் நடத்திய காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பதற்றத்தை ஏற்படுத்தின. இந்த சம்பவத்தில் தொடர்புடைய 4 சிறார்களில் ஒருவர் மட்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். ஏனைய மூன்று சிறார்கள், கூர்நோக்கு இல்லத்தில் அடைக்கப்பட்டுள்ளனர். தமிழகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்திய திருத்தணி சம்பவம் குறித்து வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கர்க் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

திருத்தணி அருகே தாக்குதலுக்குள்ளான ஒடிசா இளைஞர் வேலைக்காக தமிழகத்திற்கு வரவில்லை. அவர் அவ்வப்போது ரயிலில் அரக்கோணம், திருத்தணி ஆகிய பகுதிகளுக்கு பயணித்து வந்தது தெரியவந்துள்ளது. அவர் சுற்றுலா நோக்கில் வந்துள்ளார். அந்த புறநகர் ரயிலில் ஒடிசா இளைஞரை பார்த்த 4 சிறுவர்கள், அவர் தங்களை முறைக்கிறார் என தவறாக கருதி, அந்த நபரை கடுமையாக தாக்கியுள்ளனர்.

இது குறித்து தகவலறிந்ததும் ரயில்வே போலீஸார் அந்த இளைஞரை மீட்டு திருத்தணி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் அங்கிருந்து திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கும், அதன் பின்னர் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கும் அனுப்பப்பட்டார். அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் மூலம் அவர் நலமுடன் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது அவர் தனது சொந்த ஊருக்கே சென்றுவிட்டார். மருத்துவமனையில் அவர் கைப்பட ஒரு கடிதம் எழுதி கொடுத்துவிட்டு ஊருக்குச் சென்றுள்ளார். அது அவருடைய தனிப்பட்ட முடிவு.

அதை கட்டாயப்படுத்தி இங்கேயே சிகிச்சை எடுத்துக் கொள்ளுமாறு கூற முடியாது. அவருக்கு அரசு சார்பில் சிறப்பான சிகிச்சையும் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. வடமாநில இளைஞரை தாக்கிய 4 சிறுவர்களிடமிருந்து இரண்டு பட்டாக்கத்திகளும், இரண்டு செல்போன்களும் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்களில் 3 பேர் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் அடைக்கப்பட்டுள்ளனர். இன்னொருவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். 4 சிறுவர்களுக்கும் அதிகபட்ச தண்டனை கிடைக்கும் வகையில், உச்சபட்ச பிரிவான 307 (கொலை முயற்சி) என்ற பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வடமாநிலத்தவர் என்பதற்காக அந்த நபர் தாக்கப்படவில்லை. தமிழகத்தில் வடமாநில தொழிலாளர்கள் பாதுகாப்பாக உள்ளனர். இதுவரை இதுபோன்ற சம்பவம் நிகழ்ந்ததில்லை. தாக்குதலுக்குள்ளான நபருக்கு எத்தனை இடங்களில்காயங்கள்ஏற்பட்டுள்ளனஎன்பதுதுல்லியமாக தெரியவில்லை. இருப்பினும் அதிகபட்ச தண்டனை கிடைக்கும் வகையிலான பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளோம்.

"இது சமூக வலைத்தளங்களின் காலம் என்பதை போலீசாரும் உணர்ந்துள்ளோம். மாணவர்கள் மோதல்கள், சிறார்களின் ரீல்ஸ் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பல வழக்குகளில் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக பெற்றோர்களை அழைத்து எச்சரிக்கை வழங்குகிறோம். சிறார் விவகாரங்களில் எல்லாவற்றிற்கும் சட்ட நடவடிக்கையே தீர்வு என போலீசார் செயல்பட முடியாது" என்று அவர் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் (1.1.2026)

**மேஷம்:** புத்தாண்டு உங்களுக்கு உற்சாகத்துடன் தொடங்கும். நிலுவையில் இருந்த வேலைகள் விரைந்து முடியும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய முயற்சிகள் கைகூடும். பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும்.

**ரிஷபம்:** நிதானமாகச் செயல்பட வேண்டிய நாள். தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். பிற்பகலுக்குப் பின் சுபச் செய்திகள் வந்து சேரும்.

**மிதுனம்:** தொழில் ரீதியாகப் பெரிய மாற்றங்கள் ஏற்படும். எதிர்பார்த்த பதவி உயர்வு அல்லது இடமாற்றம் கிடைக்க வாய்ப்புள்ளது. கணவன்மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.

**கடகம்:** வெற்றிகள் தேடி வரும் நாள். எடுத்த காரியங்களைச் சிறப்பாக முடிப்பீர்கள். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். ஆரோக்கியம் மேம்படும். நண்பர்களின் உதவி சரியான நேரத்தில் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் தெளிவும் துணிச்சலும் பிறக்கும். பூர்வீக சொத்து விவகாரங்களில் சாதகமான தீர்ப்பு வரும். உறவினர்களுடன் இருந்த கசப்புகள் நீங்கும். பணவரவு திருப்தி தரும்.

**கன்னி:** நிச்சயமற்ற நிலை மாறி தெளிவு பிறக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். ஆன்மீகப் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**துலாம்:** சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் கைகூடும். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் லாபம் குறையாது. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் திட்டமிடப்படும்.

**விருச்சிகம்:** பேச்சில் நிதானம் தேவை. தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் அதிகரித்தாலும், அதற்குரிய வருமானமும் வரும். கடின உழைப்பால் இலக்குகளை அடைவீர்கள்.

**தனுசு:** ராசிநாதன் குருவின் ஆசியால் எதிலும் வெற்றி காண்பீர்கள். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிநாடு செல்லும் முயற்சிகள் பலிதமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும்.

**மகரம்:** பொறுமையைக் கையாள வேண்டிய நாள். வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். கடன் சுமைகள் குறைய வாய்ப்புள்ளது. உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம்.

**கும்பம்:** வருமானம் உயரும். திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்:** உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். மனதுக்கு இனிய சம்பவங்கள் நடைபெறும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும்.

# குண்டர் சட்டத்தை உள்நோக்கத்துடன் பிரயோகித்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும்: தமிழக அரசுக்கு ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஜன.1

சார்பதிவாளரை பணம் கேட்டு மிரட்டியதாக வராகி என்பவரை மயிலாப்பூர் போலீஸார் செப்.13ம் தேதி கைது செய்தனர். பின்னர்அவரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்க சென்னை மாநகர காவல் ஆணையர் உத்தரவிட்டார். யூடியூபர் வாராகியை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க சென்னை காவல் ஆணையர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து அவரின் மனைவி நீலிமா வழக்கு தொடர்ந்து இருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், வராகிக்கு 3 மாதம் இடைக்கால ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது. 12 வாரங்களுக்குள் போலீசார் பதிலளிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், உள்நோக்கத்துடன் குண்டர் தடுப்பு சட்டத்தை பிரயோகிக்கும் காவல் அதிகாரிகள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசுக்கு ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

## 'பராசக்தி' படத்தின் இசை வெளியீட்டு விழா எங்கு, எப்போது? வெளியான அறிவிப்பு




சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'பராசக்தி'. டான் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தில் அதர்வா, ஸ்ரீலீலா, ரவி மோகன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். இந்தி திணிப்பை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இப்படம், அடுத்த ஆண்டு பொங்கல் விடுமுறையை முன்னிட்டு ஜனவரி 10ஆம் தேதி வெளியாக உள்ளது.

இந்த நிலையில், பராசக்தி படத்தின் இசை வெளியீட்டு விழா குறித்த அறிவிப்பை தயாரிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன்படி, இசை வெளியீட்டு விழா சென்னையில் உள்ள சாய் ராம் கல்லூரியில் வருகிற ஜனவரி 3ம் தேதி பிரமாண்டமாக நடைபெற உள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'ஜன நாயகன்' ரீமேக் வதந்திகளுக்கு பதிலளித்த 'பகவந்த் கேசரி' பட இயக்குனர்



விஜய்யின் கடைசி படமான 'ஜன நாயகன்'ஐ எச். வினோத் இயக்கியுள்ளார். இதில் விஜய்யுடன், பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, பிரியாமணி, நரேன், கவுதம் மேனன் உள்ளிட்டோர் நடித்துள்ளார். இப்படம் ஜனவரி 9ம் தேதி திரைக்கு வர உள்ளது.

இதற்கிடையில், இந்தப் படம் நந்தமுரி பாலகிருஷ்ணாவின் 'பகவந்த் கேசரி' (2023) படத்தின் ரீமேக் என்று வதந்தி பரவி பருகிறது. இந்நிலையில்,நந்தமுரி பாலகிருஷ்ணா , ஸ்ரீலீலா மற்றும் காஜல் அகர்வால் நடித்த 'பகவந்த் கேசரி' படத்தின் இயக்குனர் அனில் ரவிபுடி, ஜன நாயகன் தனது படத்தின் ரீமேக் என்ற வதந்திகளுக்கு பதிலளித்துள்ளார்.

அவர்பேசுகையில், ''ஜனநாயகன்' தளபதி விஜய்யின் படம். நான் விஜய் சாரை இரண்டு முறை சந்தித்திருக்கிறேன். விஜய் சார் ஒரு உண்மையான ஜென்டில்மேன். ஜன நாயகன் படத்தில் எனக்கு ஏதேனும் பங்கு இருக்கிறதா? இல்லையா? என்பது படம் வெளியான பிறகுதான் தெரியும்" என்றார்.

## ரேணுகாசாமி கொலை வழக்கு: வீட்டு உணவை சாப்பிட பவித்ரா கவுடாவுக்கு அனுமதி



சித்ரதுர்காவை சேர்ந்த ரேணுகாசாமி கொலை வழக்கில் நடிகர் தர்ஷன் மற்றும் அவரது தோழி பவித்ரா கவுடா உள்பட குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கைதாகி பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில் ரேணுகாசாமியின் கொலை வழக்கின் விசாரணை தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கில் ரேணுகாசாமியின் தாயார் ரத்னபிரபா அளித்த வாக்குமூலம் முரணாக இருப்பதால் அதை கோர்ட்டு ஏற்றுக் கொள்ளுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அடுத்த மாதம்(ஜனவரி) 5ந் தேதி அதுபற்றி முடிவு செய்யப்படும் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் சிறையில் உள்ள பவித்ரா கவுடா மற்றும் நாகராஜு, லட்சுமணன் ஆகியோர் தாங்கள் வீட்டு உணவை சாப்பிட அனுமதிக்க வேண்டும் என்று நீதிபதிகளிடம் கோரிக்கை வைத்திருந்தனர். அதன்படி அவர்களது கோரிக்கையை ஏற்ற நீதிபதிகள் தினமும் இரவு ஒரு வேளை மட்டும் வீட்டில் சமைத்த உணவை வழங்க அனுமதித்துள்ளனர்.

## 5வது டி20 போட்டி: இலங்கைக்கு வலுவான இலக்கு நிர்ணயித்த இந்தியா



இந்தியாவுக்குசுற்றுப்பயணம்மேற்கொண்டுள்ளஇலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடந்து முடிந்த 4 போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை இந்திய அணி கைப்பற்றியது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 5வது டி20 போட்டி இன்று திருவானந்தபுரத்தில் நடைபெறு வருகிறது. இதில், டாஸ் வென்ற இலங்கை முதலில் பந்து வீச்சு தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய இந்திய மகளிர் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 175 ரன்கள் குவித்துள்ளது.

தொடக்கத்தில் இந்திய அணி தடுமாறிய நிலையில் கேப்டன் ஹனுமந்த்பிரீத் கவுரின் அதிரடி ஆட்டத்தால் 175 ரன்கள் குவித்துள்ளது. கேப்டன் ஹனுமந்த்பிரீத் கவுர் 43 பந்துகளில் 68 ரன்கள் குவித்தார். இதையடுத்து, 176 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற வலுவான இலக்குடன் இலங்கை களமிறங்கி விளையாடி வருகிறது.

## 5வது டி20 போட்டி: 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறும் இந்தியா



இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடந்து முடிந்த 4 போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை இந்திய அணி கைப்பற்றியது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 5வது டி20 போட்டி இன்று திருவானந்தபுரத்தில் நடைபெற்று வருகிறது. இதில், டாஸ் வென்ற இலங்கை முதலில் பந்து வீச்சு தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய இந்திய மகளிர் அணி 12 ஓவரில் 5 விக்கெட்டுகளை இழந்து 83 ரன்கள் எடுத்த நிலையில் தடுமாறி வருகிறது. கேப்டன் ஹனுமந்த்பிரீத் கவுர் 33 ரன்னிலும், அமன்ஜித் கவுர் 3 ரன்னிலும் களத்தில் உள்ளனர்.

## தேசிய அளவிலான ஆக்கி போட்டிகள் இனி கோவையிலும் நடைபெறும்: உதயநிதி ஸ்டாலின்



துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தமிழ்நாட்டை விளையாட்டுத் துறையின் தலைநகராக மாற்றியிருக்கும் திராவிட_மாடல் அரசு சார்பில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி கோவை ஆர்.எஸ்.புரத்தில் சுமார் ரூ.10 கோடியில் Astro Turf வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச ஹாக்கி ஸ்டேடியத்தை இன்று திறந்து வைத்தோம்.

இரவிலும் போட்டிகளை நடத்தும் வகையில் மின்கோபுரவிளக்குகளுடனும், அனைத்து நவீன வசதிகளுடனும் 7 ஏக்கரில் சர்வதேச தரத்தில் இந்த ஸ்டேடியம் உருவாக்கப்பட்டுள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச மற்றும் தேசிய அளவிலான ஹாக்கி போட்டிகள் சென்னை, மதுரை போன்று இனி கோவையிலும் நடைபெற இருப்பதில் மகிழ்கிறோம்.

இந்த ஸ்டேடியத்தை கோவையைச் சேர்ந்த ஹாக்கி வீரர், வீராங்கனைகள் சிறந்த முறையில் பயன்படுத்தி, புதிய சாதனைகள் படைக்க என் அன்பும், வாழ்த்தும்.என தெரிவித்துள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066